பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

25 05 2026 MONDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - அமெரிக்கா இடையிலான நல்லுறவு, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு வலுப்பெற்றிருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

2. பொதுசிவில் சட்டத்திலிருந்து பழங்குடியினருக்கு விலக்கு அளிப்பதற்கான சட்டப்பிரிவு கொண்டுவரப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

3. QUAD வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை இந்தியா முன்வைக்கும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தில், கடும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது, துரிதமாக வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய், அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

5. 8-வது தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டி கோவாவாவில் இன்று தொடங்குகிறது.

>>>>>><<<<<<

இந்தியாவை தாம் அதிகம் நேசிப்பதாகவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி மீது மிகுந்த மதிப்பு வைத்திருப்பதாகவும் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் 250-வது சுதந்திர தினத்தை ஒட்டி, புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியின் போது, இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் திரு. Sergio Gor-ஐ தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய திரு. ட்ரம்ப், பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமது நெருங்கிய நண்பர் என்றும், இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு வலுப்பெற்றிருப்பதாகவும் தெரிவித்தார்.

அமெரிக்க தூதருடனான உரையாடலை அனைவரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பார்வையாளர்கள் அனைவரும் கேட்டனர்.

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மார்கோ ரூபியோவும் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

நான்குநாள் பயணமாக இந்தியா வந்துள்ள திரு. மார்கோ ரூபியோ, பிரதமர் திரு. நரேந்திர மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவலுடன் இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாக ஆலோசனை நடத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

பொது சிவில் சட்டத்திலிருந்து பழங்குடியினருக்கு விலக்கு அளிப்பதற்கான சிறப்பு சட்டப்பிரிவு கொண்டுவரப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்சியில் பேசிய அவர், பழங்குடியினரின் உரிமைகளை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுத்து வருவதாக தெரிவித்தார்.

பழங்குடியின மக்களின் தலைவரும். சுதந்திரப் போராட்ட வீரருமான பகவான் பிர்ஸா முண்டா, பழங்குடியின மக்களின் நில உரிமைகளை பாதுகாப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளை அவர் எடுத்துரைத்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்து, பழங்குடியினருக்கான நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருவதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.

>>>>>><<<<<<

QUAD வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு, நாளை புதுதில்லியில் தொடங்குகிறது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. Marco Rubio, ஆஸ்திரேலிய அமைச்சர் திரு. பென்னி வாங், ஜப்பான் அமைச்சர் திரு. Toshimitsu Motegi ஆகியோர் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் QUAD வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில், முக்கிய துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து இந்தியா சார்பில் முன்வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், சர்வதேச மற்றும் உறுப்பு நாடுகளுக்கு இடையேயான முக்கிய விஷயங்கள் ஆகியவை குறித்தும் தலைவர்கள் முன்னிலையில் இந்தியா எடுத்துரைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நடப்பாண்டுக்கான பத்ம விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்குகிறார்.

புதுதில்லியில் உள்ள குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெறும் விழாவில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

பத்ம விபூஷன் விருது 5 பேருக்கும், பத்ம பூஷன் விருது 13 பேருக்கும், பத்மஸ்ரீ விருது 113 பேருக்கும் என மொத்தம் 131 பேருக்கும் வழங்கப்படுகிறது.

இதில் முதற்கட்டமாக 66 பேருக்கு இன்று பத்ம விருதுகளை குடியரசுத்தலைவர் வழங்குகிறார்.

>>>>>><<<<<<

காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம் நாளை புதுதில்லியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆணையத்தின் தலைவர் திரு. ஹல்டர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும் என்றும், இம்மாதம் 28ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த இக்கூட்டம், அவசர தேவையை கருத்தில் கொண்டு முன்கூட்டியே நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கடும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மீது, துரிதமாக வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய், காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இன்று சென்னையில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பது குறித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், காவல்துறை, சமூகநலத்துறை அதிகாரிகளுடன் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் முதலமைச்சர் இதனை தெரிவித்தார்.

பாலியல் குற்ற வழக்குகளை விரைவாக நடத்தி, குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை பெற்றுத்தர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

குற்றச்செயல்களில் ஈடுபட திட்டமிடுவோரை தடுக்கும் வகையில், அரசின் நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தற்காப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது குறித்தும், முதலமைச்சர் திரு. விஜய் ஆலோசனை நடத்தினார்.

>>>>>><<<<<<

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள கிராமப்புற சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிலையத்தின் மூலம், இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயம் மட்டுமின்றி, தொழில்துறையில் ஈடுபட்டுள்ள இளைஞர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக இந்த பயிற்சி நிலையத்தின் இயக்குநர் திரு. சதிஷ்குமார் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட் - சதிஷ்குமார் 54 செகண்ட்ஸ்)

செல்ஃபோன் தொடர்பான தொழில்நுட்ப பயிற்சியை பெற்றது தமக்கு மிகுந்த பலனை அளித்துள்ளதாக பயனாளி திரு. பாலசந்தர் கூறினார்.

(வாய்ஸ் பைட் - பாலச்சந்தர் 28 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மேற்காசியாவில் பதற்றமான சூழல் உள்ள நிலையில் இஸ்லாமியர்களின் ஹஜ் புனித யாத்திரை இன்று தொடங்குகிறது.

ஆண்டுதோறும் ஐந்து நாட்கள் மேற்கொள்ளப்படும் இந்தப் புனித யாத்திரையில் இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் இருந்து 16 லட்சம் இஸ்லாமியர்கள் பங்கேற்கின்றனர்.

சவுதி அரேபியாவில் உள்ள மெக்கா, மதீனா போன்ற புனித தலங்களுக்குச் செல்வதை இஸ்லாமியர்கள் கடமையாக கருதுகின்றனர்.

இந்த ஆண்டு இந்தியாவில் இருந்து ஒரு லட்சத்து 75 ஆயிரம் யாத்ரீகர்கள் இந்தப் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

>>>>>><<<<<<

பெட்ரோல் டீசல் விலை இன்று உயர்த்தப்பட்டுள்ளது.

பெட்ரோல் விலை லிட்டருக்கு 2 ரூபாய் 46 பைசாவும், டீசல் விலை லிட்டருக்கு 2.57 பைசாவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் 107 ரூபாய் 77 பைசாவுக்கும், டீசல் 99 ரூபாய் 59 பைசாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ள எண்ணெய் நிறுவனங்கள், பெட்ரோல் விலை உயர்வு குறித்த அறிவிப்பை முன்கூட்டியே தெரிந்துகொண்டு, அதற்கேற்ப சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது.

>>>>>><<<<<<

ஈரானுடன் சண்டை நிறுத்தம் தொடர்பான எந்தவொரு ஒப்பந்தத்தையும் உடனடியாக மேற்கொள்ள அவசரம் காட்ட வேண்டாம் என்று தங்கள் நாட்டு பிரதிநிதிகளுக்கு, அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

கடந்த 3 மாதங்களாக நடைபெற்று வரும் போர்ச் சூழலுக்கு முடிவு காண வேண்டும் என அமெரிக்கா எண்ணியுள்ள நிலையில், ஈரான் தரப்பிலிருந்து நம்பிக்கை அளிக்கும் வகையில் எந்தவொரு முன்னேற்றமும் காணப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கு நிதி தொடர்பான சலுகைகளை வழங்குவது குறித்து தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்ட பின்பு தான் அந்நாட்டுடன் எந்தவொரு ஒப்பந்தத்தையும் மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

திரு. பராக் ஒபாமா அமெரிக்க அதிபராக பதவியிலிருந்த போது, அந்நாட்டுடனான அணுஆயுத தடை ஒப்பந்தத்தில் சலுகைகள் காட்டப்பட்டதாகவும் திரு. டோனல்ட் ட்ரம்ப் குறை கூறினார்.

இதனிடையே, அமெரிக்க ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில், ஈரானுடனான சண்டை நிறுத்தத்தை 60 நாட்கள் நீட்டிப்பது குறித்தும், Hormuz

நீரிணையை திறப்பது குறித்தும் ஆலோசனைகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் அணுசக்தி திட்டத்தை செயல்படுத்துவது குறித்த உடன்பாடு எட்டப்படுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

8-வது தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டி கோவாவாவில் இன்று தொடங்குகிறது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பூட்டான் அணி - நேபாளத்தையும், இந்தியா - மாலத் தீவையும் எதிர்கொள்கின்றன.

>>>>>>END<<<<<<